ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2140/30- 2019 සැප්තැම්බර් මස 10 වැනි අඟහරුවාදා - 2019.09.10
**2140/30 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ)வின் கீழான கட்டளை*

**2015 ஆம் ஆண்டின் 182 ஆம் இலக்க கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/7/2016/எச்டபிள்யூ/17.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. :
கேடீஎஸ்/ரீயூஎம்/04/01/06/02.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், காணி அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு
'மிஹிகத மெதுர'
1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2019.09.03

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்.**- பிரதேச செயலாளர், தும்பனை.

2. **காணியின் விபரம்.**- மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் தும்பனை பிரதேச செயலாளர் பிரிவில், மேல் மாகாணம் மேற்கு பிரிவில், புப்பிலிய (321) கிராம உத்தியோகத்தர் பிரிவில் புப்பிலிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் 2018.09.07 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபடத்தில் இல. மஹா/ரீஎம்பி/ 2018/ 98 இல் கீழ் குறிப்பிடப்படுகின்ற 0.1257 ஹெக்டயாருக்கு உரிய காணித் துண்டின் எல்லை.

01. **துண்டு 'ஏ' - பெப்பிலே கெதர வத்தை - விஸ்தீரணம்: 0.1257 ஹெக்.**

வடக்கு: பி. ஜீ. நந்தாவதீ உரிமை கோரும் பெபிலே கெதர வத்தை; கிழக்கு: கலகெதர சோமரதன தேரர் உரிமை கோரும் வெலிகொடே வத்தை; தெற்கு: ஆர். யூ. ரூபேஸ்வர உரிமை கோரும் கலகஹாமுதுனே வத்தை மற்றும் வெலிகொடே வத்தை; மேற்கு: ஆர். யூ. ரூபேஸ்வர உரிமை கோரும் கலகஹாமுதுனே வத்தை மற்றும் வெல்கொடே வத்தை மற்றும் பி. ஜீ. நந்தாவதீ உரிமை கோரும் பெபிலே கெதர வத்தை.



G30947 - 26 (2019/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.